# தூதன்

தூதன்-26 டிசம்பர் 2017 தூது-11

கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும். சங்கீதம் 85:10




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| ஆராதனை பாடல்கள் | 07 |
| உதவி போதகர் மடல் | 08 |
| மகிழ்ச்சிமாத சிறப்பு நிகழ்ச்சிகள் | 10 |
| உதவி ஆயரம்மா மடல் | 11 |
| செயலர் மடல் | 13 |
| பிறந்தார் இயேசு | 15 |
| Known Celebration…. But unknown truth! | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| பரலோக தரிசனம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| A little brown seed... | 30 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 31 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary Celebrants | 36 |
| Nehemiah’s Gate | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

## ஷாலோம் - சமாதானம் (Shalom - Peace)

“ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப்பொறுப்பு அவர் தோள் மேலிருக்கும்: அவர் திருப்பெயரோ ‘வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர்’ என்று அழைக்கப்படுவார்” (எசாயா 9:6).

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

அமைதியின் அரசராம் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் இப்புதிய மாத நல்வாழ்த்துக்களையும், அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களையும் உங்களனைவரோடும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகிறேன். ஆண்டவர் இயேசு மேசியாவாகப் பிறந்தபோது வான்தூதர் மேய்ப்பர் முன் தோன்றிப் பகிர்ந்துகொண்ட நற்செய்திப் பாடலில் ‘மண்ணுலகில் அமைதி உண்டாவதாக’ என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. “அமைதி” என்கிற இந்தத் தமிழ் வார்த்தை வடமொழியான சமஸ்கிருதத்தில் “சமாதானம்” (Samadhan) என்றழைக்கப்படுகிறது. அதற்குச் “சமாதி, ஆழ்ந்த தியானத்திற்கேற்ற ஒரு மனநிலை” என்ற கருத்துக்களும், எண்ண ஓட்டங்களும் அடங்கியுள்ளன. ‘சாந்தி’ (shanthi) என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் ‘மனதிற்குள் எழும்பும் ஆசைகளையும், துன்பங்களையும், எழுச்சிகளையும் ஒழியச் செய்வதால் உண்டாகும் அமைதி’ என்பதாகும்.

**அமைதியின் விவிலியப்பொருள் (Meaning of shalom in Bible):** ஆனால் முந்தின உடன்படிக்கையான பழைய ஏற்பாட்டிலே சொல்லப்பட்டுள்ள ‘ஷாலோம்’ (Shalom) என்ற சொல்லின் மொழி பெயர்ப்பாகிய அமைதி என்பது ‘முழுநலம் அல்லது முழுசுகம்’ என்று பொருள்கொள்ளும் சுகவாழ்வைக் குறிப்பதாகும். எடுத்துக்காட்டாக, பேரரசர் தாவீது அப்சலோமின் நலத்தைப் பற்றி விசாரிக்கும்போது, அப்சலோமிற்கு ஷாலோம் இருக்கிறதா என்று கேட்கிறார் (2 சாமு.18:29). சங்கீதக்காரர் தம்முடைய நலமின்மையைப் பற்றிப் புலம்பும்போது ‘என்னுடைய எலும்புகளில் நலமில்லை, அதாவது ஷாலோமில்லை’ என்கிறார் (சங்.38:3). கடவுள் மனிதரைக் குணப்படுத்தி ஷாலோம் அல்லது சுகம் என்று தெரிவிப்பதாக ஏசாயாவும் (57:19), பொய்வாக்கினரைப் போலி மருத்துவர்களுக்கு ஒப்பிட்டு குணப்படாத காயம் இருக்கும்போது ஷாலோம் இல்லாமை என்று எரேமியாவும் (6:14) சுட்டிக் காட்டுகின்றனர். மேற்சொன்ன அனைத்துக் குறிப்புகளிலும் எபிரேய வார்த்தையான “ஷாலோம்”, “முழுசுகம்” அல்லது “முழுநலன்” என்பதையே குறிப்பிடுகிறது. (Shalom in Hebrew is peace which denotes a wholistic healing or health and not simply a state of tranquility by supperession or escape from the struggles or bearing with any kind of injustice).

**முழுநல வாழ்வே அமைதி (Wholistic well being is peace):** ஒருவர் சுகமாக, நலமாக வாழ்ந்தால் அவருடைய நிலைமையை ஷாலோம் என்று அறிகிற சூழலில், இறைபயமின்றி வாழ்வோரின் வாழ்வு ஷாலோமற்றது என்று சங்கீதக்காரர் அங்கலாய்க்கிறார் (73:3). ஆகவே, எபிரேயர்கள் ஒருவரையொருவர் "ஷாலோம்-அலெய்-கெம்" (Shalom Alei Khem) என்று வாழ்த்துவதன்மூலம் உடல், உள்ளம், மனம், ஆன்மா அனைத்திலும் ஒருவர் முழுநலனுடன் விளங்கவேண்டுமென வாழ்த்துகின்றனர். ஆண்டவராகிய இயேசுவும் இப்படிப்பட்ட முழுநலவாழ்வை அல்லது நிறைவாழ்வை மனுக்குலத்திற்கு வழங்க வந்த மேசியா என்பதை நாம் தெளிவாக உணரவும், நம்பவும் முடிகிறதல்லவா! (Those who do not have the fear of God are living without shalom. The greetings exchanged in the Hebrew community, i.e. Shalom-Alei-khem is nothing but wishing the other to have a wholistic well being in body, mind, heart and soul. Jesus came in to the world to bring this wholistic peace to all).

**சமத்துவ உடன்படிக்கையே அமைதி (Shalom is an equal agreement / covenant):** அதேபோல, ஷாலோம் என்கிற எபிரேய பதம், அரசர் ஒருவரின் வெற்றியையும், அவ்வெற்றியினால் நாட்டில் உண்டாகும் அமைதியையும் சுட்டுகிறது (2 சாமு.18:28, 1 நாளா 12:18). ஷாலோம் என்னும் இந்த வாழ்த்துதான் இசுலாமிய நண்பர்களின் "சலாம்" வாழ்த்துதலாகும். இச்சொல் ஒரு தனி மனிதனுடைய வாழ்வை மட்டும் சுட்டிக்காட்டாமல், ஒரு நாட்டின் அல்லது நகரத்தின் நல்வாழ்வையும் குறிக்கும் (எரே.29:7). சங்கீதக்காரர் எருசலேமின் நல்வாழ்வுக்காக (அ) சமாதானத்திற்காக மன்றாடுதலைக் காணலாம் (சங்.122:6). மேலும் இரண்டு அரசர்களுக்கிடையே ஏற்படும் நட்பு, ஒற்றுமை, ஒத்துழைப்பு என்னும் நிலையிலும் (1 இராஜா.5:12), கடவுளும் - மனிதனும் நல்லுறவில் பொருந்தியிருப்பதன் வெளிப்பாட்டிலும் (ஏசா. 54:10) ஷாலோம் பயன்படுத்தப்படுகிறது. (Shalom also stands for a royal victory; greeting one another with the intention of wholistic well being of an individual, a city and a country. It is also a covenantal relationship or agreement between two parties or between the Divine and the human).

**கடவுளே அந்த அமைதி (God is Shalom):** "யேகோவா ஷாலோம்" - கடவுள் தாமே அமைதியைத் தருகிறவர் (நியா.6:24) என்பது கிதியோன் தாம் கட்டின பலிபீடத்திற்கு சூட்டின பெயராகும். கடவுளுக்கு அஞ்சுகிற மற்றும் சிறிய குடும்பமாகிய இஸ்ரவேலை (நியா.6:15) ஆண்டவர் பெரிய மற்றும் பெலத்த சக்தியான மீதியானியரை முறிய அடிக்கும் அடையாளமாக மாற்றி, வெற்றி தந்து, எளியவர்-வலியவர் என்ற நிலையை மாற்றி அமைதியை அல்லது சமாதானத்தை ஏற்படுத்தியதால், அச்சமில்லாத வாழ்வை உருவாக்கியதால் அவருக்கு யேகோவா ஷாலோம் என்று பெயரிட்டு, வணங்கிப் பணிந்தனர்.

இஸ்ரவேல் மக்கள் ஒரு பெரிய, பலத்த இனமாகி, இறைச்சத்தத்தை விட்டு விலகி பாகால் என்னும் சுய இச்சை, சுய செழுமைக்கு நேராய்த் தவறான பாதையில் சென்றபோது ஏற்பட்ட அடக்குமுறையினால் உண்டான சமாதானம் வெறும் மேற்பூச்சான சமாதானம் மட்டுமே என்று எச்சரிக்கிறார் இறைவன் (எரே.6:14). மாய்மாலமான பக்தி வாழ்வையும், சமய வாழ்வையும் கண்டிக்கிறார். அதே நேரத்தில், துன்மார்க்கருக்கு நிச்சயமாய் சமாதானம் கிடையாது என்றும் அறுதியிடுகிறார் (ஏசா.48:22). (Jehovah is the Lord of Shalom. Gideon and the people of Israel worshipped and venerated him. Jehovah Shalom was because the Lord was with the God fearing meek and weak against the strong evil majority. God cautions his own people when they were outwardly looking pious in their religion and inwardly hypocratic. It is not a real peaceful condition. There is definitely no peace for the wicked.)

**கிறிஸ்து அமைதியின் அரசர் (Christ, Prince of peace):** சமாதானம் அல்லது அமைதி என்பது கடவுளின் ஆட்சி நிலை. மேசியா கொண்டுவரப்போகும் நிலை (சகரியா 9:9,10). ஆகவே அவர் அமைதியின் அரசர் என்றும் அவரது அரசுக்கு முடிவில்லை என்றும் ஏசாயா சுட்டுகிறார் (9:6,7). மீண்டும் இறைமையுடன் மனுமையை/மானுடத்தை இணைக்கும் வெளிப்பாடாக இயேசுகிறிஸ்து பிறந்தபோது தேவதூதரின் செய்தியும் அதுவே. “மண்ணில் அமைதி” (லூக்கா 2:14). இங்கு ஐரேனே (Irene) என்கிற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினையை ஏற்றுக்கொண்ட ஆண்டவர் (ஏசாயா 53:5), பூமியின்மேல் அமைதியை அல்ல, பட்டயத்தை அனுப்ப வந்ததாகக் குறிப்பிடுவது ஏன்? (மத்தேயு 10:34). ரோம அரசைப்போல அடக்கு முறையில் அமைதியை ஏற்படுத்தவோ அல்லது சண்டையில்லாத சூழ்நிலையை உருவாக்கவோ தாம் வரவில்லை; மாறாக, அனைவருக்குமான சமத்துவ, சுமுகமான, சமாதானமான, முழுநல வாழ்வு தரும் இறையாட்சியை ஏற்படுத்தவே வந்ததை இதன்மூலம் உறுதிப்படுத்துகிறார். கடவுளோடும், பிற மனிதரோடும, படைப்பனைத்தோடுமுள்ள ஒப்புரவாகுதலும், இணக்கமுமே இறை அமைதியைக் கொண்டுவரும். இதற்கு சுயங்களைச் சாகடித்து, அடக்குமுறையை அழித்து, ஆணவத்தை ஒழித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் அனைவரும் ஒன்றாயிருக்கும் (கலா.3:28) நிலை உருவாக்கப்படவேண்டும். இதுவே திருச்சபைக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், தேசத்திற்குமான இறையாட்சி அமைதியின் அடையாளமாகும். (Christ Jesus, the Prince of Peace, came to establish equilibrium not by power or principalities but with amicable reconciliation). ஆண்டவரே, நான் நினைக்கும் அமைதி அல்ல, நீர் விரும்பும் அமைதியின் கருவியாய் என்னைப் பயன்படுத்தும். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## கிறிஸ்து பிறப்பின் தனிச்சிறப்பு
## (The uniqueness of Christmas)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

உயர்ந்த மேன்மையை உதறித்தள்ளி, நம்மை மீட்டெடுத்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக வரலாற்றையே மாற்றிப்போட்ட ஆண்டவரின் பிறப்பு சிறப்புக்குரியது. காரணம், சமுதாயத்தில் மிகச் சாதாரணமாய் எண்ணப்பட்ட, குழம்பிப்போயிருந்த, பயத்திலிருந்த மற்றும் கலங்கின மக்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு புது நம்பிக்கையாகவும், பெலனாகவும், உற்சாகமுள்ளதாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் அதிகாரம் மற்றும் ஆதிக்கம் கொண்ட மக்களுக்கு எச்சரிப்பாகவும், மனம் திரும்புதலின் அழைப்பாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட தனிச்சிறப்புடைய மூன்று முக்கிய அம்சங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது நல்லது.

### 1.சிறிய ஊர் - Unique Town ( மீகா 5:2; மத்தேயு 2:6 ):

ஆண்டவர் பிறந்த ஊர் "பெத்லகேம்" என்று அறியப்படுகிறது. இதற்கு எபிரெயத்தில் "அப்பத்தின் வீடு" என்று பொருள். இன்று உலகின் பல இடங்களிலிருந்து மக்கள் வந்து புனிதப்படுத்தும் பிரபலமான ஒரு ஊராகக் கருதப்பட்டாலும், பழைய ஏற்பாட்டின் நாட்களில் இஸ்ரவேலின் ஊர்களுக்குள்ளே மிகச் சிறியதும், அடையாளம் தெரியாததுமான குக்கிராமம். யாக்கோபின் மனைவியாகிய ராகேல் அடக்கம் பண்ணப்பட்ட இந்த எப்பிராத்தா (ஆதி.35:19, 48:7) மிகச்சிறியதாயிருந்தாலும், இஸ்ரவேலரை ஆளப்போகிறவர் அங்கிருந்து புறப்படுவார் என்ற தீர்க்கதரிசனமும் ஏற்கனவே சொல்லப்பட்டது (மீகா 5:2). ஆகவே தேவ வார்த்தையை நிறைவேற்ற மாத்திரம் அல்ல, அடையாளம் தெரியாததை வெளிப்படுத்தும் கடவுளின் திருத்திட்டத்தை நிறைவேற்றவும் கிறிஸ்துவின் பிறப்பு பெத்லகேம் என்னும் சிற்றூரிலே ஏற்படுகிறது.

### 2.அரிய பெண் - Unique Woman (லூக்கா 1:28-35):

இறைமகன் பிறப்புக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஊர் மட்டும் அல்ல, தாயாரும் தனிச்சிறப்பு வாய்ந்தவர். இதற்கு முன்னால் அடையாளம் காட்டப்படாத சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு கன்னிப்பெண்.

அரண்மனைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணையோ, சமய வாழ்க்கையில் மிகப்பிரபலமான ஆசாரியக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணையோ கடவுள் தம் குமாரனின் தாயாகத் தெரிந்து கொள்ளாமல், அடித்தளத்திலுள்ள எளிமையான குடும்பத்தின் கன்னிப்பெண்ணைத் தெரிந்து கொள்கிறார். அதுவும் ஆண் ஆதிக்கத் துணையின்றி பெண்ணைக் கொண்டு மாத்திரம் நிறைவேற்றியது தனிச்சிறப்புடையது.

### 3. பெரிய நோக்கம் - Unique Purpose (லூக்கா 2:10,14; 4:18) :

ஆண்டவர் ஏன் பிறந்தார் என்கிற செய்தி இன்று உலக அளவில் பல வகைகளில் புரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், அவர் பிறந்த காலத்தில் எளிய மேய்ப்பர்களுக்கு தேவதூதர்களால் சொல்லப்பட்ட செய்தியின் சாராம்சம் உன்னதமானது. அதென்னவெனில், "உன்னதத்திலே தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாக்குவதற்காக"த்தான். வீழ்ந்து போன மனுக்குலத்தையும், படைப்பையும் மீண்டும் நிலைநிறுத்தி, விண்ணுலகத்தோடு இணைத்து, இறையாட்சியை மீண்டும் ஏற்படுத்தவே மீட்பரின் பிறப்பின் நோக்கம் இருக்கிறது. வாழ்வு இழந்தவர்களுக்குப் புதுவாழ்வையும், நம்பிக்கை குன்றியோருக்குப் புது நம்பிக்கையையும், அமைதியிழந்தோருக்குச் சமாதானத்தையும். நோயுற்றோருக்குக் குணமாக்குதலையும், சிறைப்பட்டோருக்கு விடுதலையையும் வழங்கும் பெரிய நோக்கத்தைக் கிறிஸ்துவின் பிறப்பு நிறைவேற்றியது.

இப்படியாக, இறைமகனின் பிறப்பு சிற்றூராகிய பெத்லகேமிலும், கன்னித்தாயாகிய மரியாளிடத்திலும் உருவாகி பெரிய நோக்கமான முழுமீட்பை உறுதி செய்தது. மரியாளின் பாடலில் குறிப்பிட்டுள்ளதுபோல, சமத்துவத்தை சமூகத்திலும், பொருளாதாரத்திலும், சமயத்திலும் கொண்டு வந்த புரட்சிப் பிறப்பாகவும், வரலாற்றைப் புதுப்பித்த அடையாளமாகவும் இருக்கிறபடியால் நாம் நம்முடைய வாழ்க்கையை ஒருமுறை கூட புதுப்பித்து சமத்துவ இறையாட்சியைத் இந்த உலகத்திலே கொண்டுவரும் கருவிகளாக விளங்குவோம். சிறியவர்களாகிய நம்மைப் புழுதியிலிருந்தும், எளியவர்களாகிய நம்மைக் குப்பையிலிருந்தும் தூக்கி நிமிர்த்தின கர்த்தருக்கு எப்போதும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# ஆராதனை பாடல்கள் - டிசம்பர் 2017

பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 47 கவி 1 களிகூரு சீயோனே
ஆராதனை இறுதி கவி : பாமாலை 9 கவி 1,2,5 எல்லோருக்கும் மா

| | | |
|---|---|---|
| 01-12-2017 | | |
| பாமாலை | 46 | இம்மானுவேலே வாருமே |
| பாமாலை | 165 | கிறிஸ்து எம் ராயரே |
| கீர்த்தனை | 18 | பாடித்துதி மனமே பரனை |
| கீர்த்தனை | 51 | மாசில்லாத் தேவபுத்திரன் |
| கீர்த்தனை | 54 | வாரும் பெத்லகேம் வாரும் |
| 08-12-2017 | | |
| பாமாலை | 153 | ஆ என்னில் நூறுவாயும் |
| கீர்த்தனை | 109 | பாதகர் என் வினைதீர் |
| பாமாலை | 54 | சபையே இன்று வானத்தை |
| கீர்த்தனை | 20 | வாரும் நாம் எல்லாரும் கூடி |
| கீர்த்தனை | 42 | அதி மங்கல காரணனே |
| கீர்த்தனை | 5 | இயேசு நாயகனை துதிசெய் |
| 15-12-2017 | | |
| பாமாலை | 4 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை | 56 | நள்ளிரவில் மா தெளிவாய் |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே ரட்சகனைத் |
| கீர்த்தனை | 43 | ஆ! அம்பர உம்பர |
| கீர்த்தனை | 41 | கண்டேனென் கண் குளிர |
| 22-12-2017 | | |
| பாமாலை | 44 | இயேசுவே உம்மைத் தியானித்தால் |
| பாமாலை | 102 | எங்கே ஓடுவேன் |
| பாமாலை | 55 | நடுக்குளிர் காலம் |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை | 45 | ஆர் இவர் ஆராரோ |
| கீர்த்தனை | 48 | சமாதானம் ஓதும் |
| 25-12-2017 | | |
| பாமாலை | 59 | மெய் பக்தரே நீர் |
| பாமாலை | 53 | கேள்! ஜென்மித்த ராயர்க்கே |
| கீர்த்தனை | 44 | ஆதித்திருவார்த்தை |
| கீர்த்தனை | 49 | பெத்தலையில் பிறந்தவரை |
| கீர்த்தனை | 50 | பெத்லகேம் ஊரோரம் |
| பாமாலை | 60 | ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள் |
| 29-12-2017 | | |
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| கீர்த்தனை | 103 | எத்தனை திரள் என் |
| பாமாலை | 17 | மகா அதிசயங்களை |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 8 | ஏசுவையே துதி செய் |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |

## வாக்குத்தத்த செய்தி

## நிறைவேறுதலே கிறிஸ்துமஸ்

பெத்லகேமிலே பாலனாக அவதரித்த நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட ஆயத்தப்படுகிற நமக்கு ஆண்டவர் இந்த மாதத்தில் கொடுத்த வாக்குத்தத்தம்:

நிறைவேறும்படி நடந்தது - மத்தேயு 1:22 (b)

கிறிஸ்துவின் பிறப்பு தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசன நிறைவேறுதலே. இதை நாம் மத்தேயு சுவிசேஷத்தில காணலாம். இந்த பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடுகிற நமக்கும், தேவன் இதே ஆசீர்வாதத்தைச் சொந்தமாக்குகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் வாக்குத்தத்தங்கள் யாவும் ஆம் என்றும், ஆமென் என்றும் நம்முடைய வாழ்வில் நிறைவேறும். இதையே கிறிஸ்து பிறப்பின் மாதத்தில் நாம் பெற்றுக்கொள்ளப் போகிறோம். தேவன் நம்முடைய வார்த்தையை உங்கள் வாழ்வில் இந்த மாதத்தில் எப்படி நிறைவேற்றுவார் என்பதைத் தியானிப்போம்.

**1.உன்னோடு கூட இருப்பார் (மத்தேயு 1:23):**
இம்மானுவேல் - தேவன் நம்மோடிருக்கிறார் (மத்.1:23) என்று ஏசாயா (ஏசாயா 7:14) தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டதன் நிறைவேறுதலே கிறிஸ்து பிறப்பு. இதில் வரும் ஆசீர்வாதம் தேவன் நம்மோடு கூட இருப்பார் என்பதே. இந்த மாதத்தில் இதை நமக்கு நிறைவேற்றுவதே கிறிஸ்துமஸ். தேவன் நம்மோடு எந்த சூழ்நிலைகளிலெல்லாம் இருப்பார்? சோதனையில் இருப்பார். மத்தேயு நான்காம் அதிகாரத்தில், இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்படும்போது, ஆவியானவர் (மத். 4:1) அவரோடு இருந்து, சோதனைக்காரனான பிசாசையும், சோதனைகளையும் ஜெயிக்க உதவி செய்தார். அதையே நமக்கும் யோவான் 14:16 மூலமாக வாக்குப்பண்ணுகிறார்.

கானாவூர் கல்யாணவீட்டில், திராட்சைரசம் இல்லை என்ற சோதனை வந்தது. இயேசு கூட இருந்தபடியால் அந்த குறைவு மாறினது. குறைவு வரும் சூழ்நிலையில் இயேசு அந்த குடும்பத்தில் இருந்தார். மார்த்தாள்-மரியாள் வீட்டில் சகோதரனின் இழப்பு சோதனையாக வருகிறது. இயேசு சென்று ஆறுதல்படுத்தினார். பேதுரு வீட்டில் மாமியின் வியாதி சோதனையாக இருந்தது. இயேசு கூட இருந்து வியாதிப்படுக்கையை மாற்றினார். இந்த பிறப்பின் பண்டிகையை கொண்டாட ஆயத்தப்படும் நமக்கும் தேவன், நம் சோதனைகள் மாறும்படி, இம்மானுவேலராக தம்முடைய பிரசன்னத்தை வாக்குச்செய்கிறார்.

**2. உன்னில் உதிப்பார் (மத்தேயு 2:6) :**
மீகா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட வார்த்தை (மீகா 5:2) நிறைவேறினது. பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல் பதினான்கு தலைமுறையாக, (மத்.1:17) தாவீதின் வம்சம், ராஜரீக அதிகாரத்தை இழந்து, கோணலாகி, இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீதை எழும்பப்பண்ணிண பெத்லகேம் எண்ணமற்று கிடந்தது. கோணலைச் செவ்வையாக்கும் கிறிஸ்துவை, சிறுத்துப்போன பெத்லகேமிலிருந்து அதிபதியாக எழுப்புவேன் என்பதே வாக்கு. நம்முடைய வாழ்வில் நாம் சிறியவர்களாக இருக்கலாம், மற்றவர்கள் பார்வையில் அற்பமாக எண்ணப்படலாம், ஞானத்தில் குறைவு இருக்கலாம், பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கலாம். திருச்சபையாகிய யூதேயாவில் சாதாரணமாக எண்ணப்படலாம். ஆனால் கிறிஸ்து உன்னிலிருந்து எழும்புவார். உனக்கு மகிமை, கனம், ஆசீர்வாதம், சம்பத்து உண்டாகும்.

இயேசு இருந்த மாட்டுக்கொட்டிலுக்கு, எல்லா பொன், வெள்ளைப்போளம், தூபவர்க்கம் வந்தது. இடம் பெரிதல்ல, இயேசு எழுந்திருக்கும் இடத்தில் எல்லாம் வரும். இந்த மாதம் நமக்கும் இதை வாக்குப்பண்ணுகிறார். எது கொஞ்சமாயிருக்கிறதோ, ஆண்டவர் அதில் எழுந்தருளுவார். நம் வாழ்வில் எழுந்தருளும் அவரிடம் அதிகாரம் உண்டு. பிரபு என சொல்லப்பட்டதால், அவருக்கு அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரம் பாவத்தை, சாபத்தை, உலகத்தை, வியாதியை ஜெயித்த அதிகாரம். இந்த அதிகாரம் நம்மில் செயல்படும்படி நம்மில் உதிப்பார்.

**3. உன்னை கொண்டு வருவார் (மத்தேயு 2:15):**
ஓசியா தீர்க்கதரிசி (ஓசியா 11:1) மூலம் சொல்லப்பட்டது நிறைவேறினது. ஆண்டவர் எகிப்திலிருந்து இயேசுகிறிஸ்துவைக் கொண்டுவந்தார். ஒரு ஒப்புமையாக, நிழலாட்டமாக, அன்று எப்படி எகிப்தின் நிந்தையிலிருந்து தம் ஜனத்தை வெளியே, கொண்டுவந்தாரோ, அதையே மீண்டும் கிறிஸ்துவின் மூலம் எல்லாருக்கும் வாக்குச் செய்கின்றார். நம்முடைய வாழ்விலுள்ள நிந்தைகளைப் புரட்டிப்போட்டு, நம்மை இப்படிப்பட்ட துன்ப, அடிமை நிலைகளிலிருந்து, கர்த்தருடைய எல்லையான நீதியும், சமாதானமும் நிறைந்த ஆசீர்வாதங்களுள்ள கானான் தேசத்துக்கு இம்மாதத்தில் நடத்துவார்.

மட்டுமல்ல, நாசரேத் என்றால் (மத்.2:23) நன்மை புறப்படாத ஒரு இடம். அதிலிருந்து நன்மை செய்கிறவாராகச் சுற்றித் திரிந்தார். நம் வாழ்விலும் இந்த மாதம் இப்படியே நிறைவேறுதலைக் கட்டளையிடுவாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# இம்மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள்!

| | | | |
|---|---|---|---|
| துபாய் | 04-12-2017 | இரவு 08:00 மணி | சிறுவர் பாடகர் குழுவின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை, St. Paul's Hall. |
| | 14-12-2017 | மாலை 06:00 மணி | கிறிஸ்துமஸ் மர விழா<br>Indian High School Auditorium |
| | 25-12-2017 | அதிகாலை 04:00 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை<br>St. Paul's Hall. |
| | 31-12-2017 | நள்ளிரவு 11:00 மணி | ஆண்டு முடிவு-புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கைத் திருவிருந்து<br>ஆராதனை, St. Paul's Hall. |
| ஃபுஜைரா | 08-12-2017<br>வெள்ளி | மாலை 5:00 மணி | ஸ்தோத்திரப்பண்டிகை |
| | 14-12-2017<br>வியாழன் | இரவு 07:00 மணி | கிறிஸ்துமஸ் மரவிழா |
| | 21-12-2017<br>வியாழன் | இரவு 07:00 மணி | சபையார்<br>கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 24-12-2017 | இரவு 11:30 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 01-01-2018 | காலை 04:00 மணி | புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| இராஸ் அல் கைமா | 15-12-2017 | மாலை 07:00 மணி | கிறிஸ்துமஸ் மர விழா |
| | 22-12-2017 | மாலை 07:00 மணி | கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 25-12-2017 | இரவு 07:30 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 01-01-2018 | இரவு 07:30 மணி | புதுவருட பண்டிகை<br>உடன்படிக்கை ஆராதனை<br>பரிசுத்த திருவிருந்து ஆராதனை |

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

கென் நல்ல ஓவியன். இயேசுவின் இறுதிப் போஜனத்தைத் திரையில் படமாகச் சித்தரிக்க உட்கார்ந்தார். ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை உட்காரவைத்து வரைந்தார். படம் அழகாக வந்துகொண்டிருந்தது. அவர் நினைத்ததற்கும் மேலாக அழகாக ஓவியம் வரைய தேவன் அனுக்கிரகம் செய்தார். இரண்டு இடங்கள் மட்டுமே காலியாக இருந்தன. கிறிஸ்துவுடையதும், யூதாசுடையதும்.

கென், கிறிஸ்து போன்ற முகத்தைத் தேடிப் பட்டணத்தைச் சுற்றிவந்தார். இறுதியில் சிறுபிள்ளைகளுக்கு ஓய்வுநாள் பாடசாலை நடத்திக் கொண்டிருந்த ஒரு வாலிபனைக் கண்டார். “படத்திற்கு கிறிஸ்துவாக உட்கார்ந்திருக்க முடியுமா?” என அவனை வினவினார். டேனியல் என்ற அந்த வாலிபன் மகிழ்ச்சியோடு ஒத்துக்கொண்டான். ஆகவே அவன் கென்னுடைய ஸ்டுடியோவிற்கு வர, கிறிஸ்துவின் இடம் நிரப்பப்பட்டது. கென்னுக்கு மிக்க மகிழ்ச்சி.

இப்போது யூதாசின் இடம் மட்டுமே காலி. கென் ஒவ்வொரு முகத்தைப் பார்த்து சுற்றிவந்தார். சேரிகளுக்கும், சிறைச்சாலைகளுக்கும், ஒதுக்கமான இடங்களுக்குமாக அலைந்து பார்த்தார். ஒரு பயனுமில்லை. இப்படித் தேடி இரண்டு ஆண்டுகள் கடந்தன.

ஒருநாள் கென் ஒரு சாராயக்கடையைத் தாண்டிச் சென்றபோது, அங்கே குடித்துக் கொண்டிருந்த ஒருவனைக் கண்டார். கொடூரமான அவனது முகம் கடினப்பட்டிருந்தது. கண்கள் சிவந்து தள்ளிக் கொண்டிருந்தன. ஆஹா, யூதாசின் இடத்தை நிரப்ப இதைவிட பொருத்தமான முகம் கிடைக்கப் போவதில்லை என எண்ணினார் கென். அவர் உள்ளே சென்று அம்மனிதனிடம் அன்பாகப் பேசினார். அவனும் கென்னோடு அவரது ஸ்டுடியோவிற்கு வந்து யூதாசாக முகம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டான்.

வேலை துவங்கியது. வரைந்து கொண்டிருந்தபோதே அம்மனிதனின் கண்களில் கண்ணீர் சேர்ந்து பளபளத்தன. பின்பு அவை கீழே உருண்டோடின. கென் திடுக்கிட்டார். இவனை அழச்செய்தது என்ன? இவனைப் புண்படுத்திவிட்டேனா? என்று கென் குழம்பி காரணத்தை கண்டுபிடிக்கத் தவித்த வேளையில் அவனே விம்மி விம்மி பேச ஆரம்பித்தான். என்னைத் தெரியவில்லையா? கென்னுக்கு விடுகதையாய் இருந்தது அவனது கேள்வி. எங்கே பார்த்தேன் இந்த மனிதனை என்று தன் மூளையைக் கிண்டினான்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக உங்கள் படத்திற்கு வந்து உட்கார்ந்த டேனியல்தான் நான். இப்போது யூதாசாக உட்கார்ந்திருக்கிறேன். கிறிஸ்துவை விட்டுத் தூரமாகச் சென்றேன். சோதனைகளுக்கு இடம் கொடுத்தேன். சிகரெட் குடித்தேன், மது அருந்தினேன். கெட்ட நண்பரோடு சேர்ந்தேன். எல்லாத் தீயபழக்கங்களும் அதைத் தொடர்ந்தன. நான் கிறிஸ்துவாயிருந்தேன். இப்போது யூதாசாக இருக்கிறேன் என்று தன் முகத்தைக் கைகளில் பதித்தவனாய் விம்மி விம்மி அழுதான் டேனியல்.

கென் தன் கரங்களை அவன் தோள்களைச் சுற்றிப்போட்டு அன்போடு மென்மையாகப் பேசி அவனைத் திரும்பவும் கிறிஸ்துவிடம் நடத்தினார்.

நீ கிறிஸ்துவைப் போல் இருக்கிறாயா? யூதாசைப்போல் இருக்கிறாயா?

**வேதவாசிப்புப் பகுதி :** எபேசியர் 4:24-5:2
**மனப்பாட வசனம் :** எபேசியர் 4:24

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - டிசம்பர் 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-12-2017 வருகையின் வெள்ளி | கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்தல் | எரேமியா 33:10-16 | 1 தெசலோ. 3:6-13 | லூக்கா 1:39-45 | 68: 11-20 |
| 08-12-2017 திருமறை ஞாயிறு | இறைவாக்கு பாதைக்கு ஒளி | ஏசாயா 55:6-13 | கலாத்தியர் 1:11-17 | லூக்கா 1:67-80 | 119: 105-112 |
| 15-12-2017 | மீட்பின் நம்பிக்கை | செப்பனியா 3:14-20 | 2 பேதுரு 3:8-13 | மத்தேயு 1:18-25 | 43 |
| 22-12-2017 | அக்களிப்போம், அருகில் ஆண்டவர் | சகரியா 2:6-13 | 1 தெசலோ. 5:12-24 | யோவான் 10:16-24 | 50: 1-15 |
| 25-12-2017 கிறிஸ்துமஸ் | சமாதானப் பிரபுவுக்கு இடமளித்தல் | ஏசாயா 9:2-7 | எபேசியர் 1:3-14 | லூக்கா 2:1-14 | 85 |
| 29-12-2017 குடும்ப ஞாயிறு | குடும்பம் இறைவனின் பரிசு | யோசுவா 24:14-22 | எபேசியர் 3:14-21 | மாற்கு 3:31-35 | 128 |
| 31-12-2017 வருட முடிவு புத்தாண்டு | அனைவரோடும் உடன்படிக்கை | ஏசாயா 54:10-17 | ரோமர் 5:1-11 | லூக்கா 13:1-9 | 136 |

# செயலர் மடல்

தம்முடைய கிருபையை நமக்கு அளவில்லாமல் தந்து, நம்முடைய பலவீனத்திலே தம்முடைய பூரண பலம் தந்து நம்மைக் காத்து வழிநடத்தி வருகிற தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

கடந்த நவம்பர் மாதம் நமது திருச்சபையின் குடும்ப விழாவாகிய அறுப்பின் பண்டிகையை நாம் மிகச் சிறப்பாகக் கொண்டாட தேவன் கிருபை செய்தார். இவ்விழாவை நடத்த இடம் தந்து உதவிய இந்தியன் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்திற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த திரு. டேவிட் தாமஸ் அலெக்ஸாண்டர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதற்காக மிகவும் ஜெபித்து உழைத்த திருச்சபையின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சபையார் தங்களது பாரம்பரிய உணவு மற்றும் உபயோகப் பொருட்களைப் படைத்து இவ்விழாவை சிறப்பித்ததற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் திருச்சபையின் வருடாந்தர எழுச்சி மாநாடு (Annual Convention) நவம்பர் 20, 21 & 22 ஆகிய தேதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் சிஷ்யா ஊழியத்தைச் சேர்ந்த சகோ. அசோக் வேதநாயகம் அவர்கள் தேவசெய்தி கொடுத்து நம் திருச்சபையின் அங்கத்தினர்களை மிகவும் உற்சாகப்படுத்தினார்கள். அவர்கள் 23ஆம் தேதி புஜைராவிலும், 24ஆம் தேதி ராஸ் அல் கைமா கிளைச்சபைகளிலும் தேவசெய்தி கொடுத்தார்கள். திருச்சபையின் ஊழியர்கள் கூடுகையையும், சனிக்கிழமையன்று நடைபெற்ற அனைத்து திருச்சபைக்கான சிறப்புக் கூடுகையையும் அவர்கள் மிகச்சிறப்பாக நடத்தி தேவசெய்தி கொடுத்தார்கள்.

பணி செய்யும் நமது திருச்சபையின் வாலிபர்களுக்கான சிறப்புக்கூடுகை ஆயர் இல்லத்தில் 24ஆம் தேதி வெள்ளியன்று நடைபெற்றது. இக்கூடுகையில் ஜெம்ஸ் (GEMS) ஊழியத்தை சார்ந்த சகோ.ராஜேஷ் டதி அவர்கள் வாலிபர்களை தேவசெய்தியோடு கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்கள்.

25-ம் தேதி நடைபெற்ற ஐக்கிய திருச்சபைகளின் கால்பந்து போட்டியில் நமது திருச்சபைப் பிள்ளைகள் பங்குபெற்று சிறப்பு ஆறுதல் பரிசு பெற்றுள்ளனர். இவர்களை வழிநடத்தினவர்களை அன்போடு பாராட்டுகிறோம்.

பண்டிகை மாதமாகிய வருகின்ற டிசம்பர் மாதம் உங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்க நமது தேவாதி தேவனை வேண்டுகிறேன். இம்மாதத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஊக்கமாக ஜெபிக்குமாறு மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.




## CHRISTMAS TREE FUNCTION

**Venue : INDIAN HIGH SCHOOL AUDITORIUM**

**Date : 14-12-2017**

**Time : 6:00 pm**



## NEW PARSONAGE

Near Al Garhoud-Choithram Super Market

Behind “Le Meridian Hotel”

Street No : 47, Villa No 6A

Tel.Res.: 04 2552065, Mob: 050 5533645,

Tel.Off.: 04 2249249. Email: tamilcsi@eim.ae

# பிறந்தார் இயேசு

பிறந்தார் பாலன் பறந்தார் தூதன்
உறங்கும் இரவில் இறங்கும் தூது
கிரங்கும் மேய்ப்பர் கவரும் நற்செய்தி
ஒர்ரட்சகர் பேர்இயேசு ஊர்பெத்தலை வேர்தாவீது

பாட்டும் மீட்டும் மெட்டும் வாழ்த்தும்
கேட்டோம் தொட்டோம் வான்கூட்டம் தேன்ஊட்டம்
தேட்டமும் ஒட்டமும் மண்விண் கைகுலுக்கும்
காட்சியும் சாட்சியும் மாட்சியும் தெய்வீகம்

கேக்கல தொட்டில் பாக்கல கட்டில்
மாட்டுக் கொட்டில் ஊட்டிப் போட்டபுல்
காட்டு வைக்கோல் மேட்டுக் கந்தலில்
வீடில்லை கூடமில்லை தாய்சேய் ஏழ்மையில்

புத்துருப் பாத்திரன் பத்தினி வயிற்றவன்
இத்தரைப் பிறப்பு முத்திரைச் சிறப்பு
மத்தியதரை ஈசன் எத்திசைக்கும் நேசன்
ஒத்தவர் மாத்திரள் போற்றுதல் கிறிஸ்மஸ்

பங்நூறு ஆண்டுகள் சொன்னாரு தீர்க்கத்தரிசனம்
இன்னார் வம்சத்தில் இன்னார் பிறப்பார்
அன்னார் பெயரும் பிங்நாள் உயர்வும்
இங்நாள்வரை தன்னிகரில்லா மகுடாதிபனை எதிர்நோக்கினர்

பிறந்ததும் பிறந்தார் பறமருள் மைந்தன்
திறந்ததும் திறந்தார் திக்கெலாம் ஒளிக்கதிரவன்
திறம்பெறும் ஆறுதல் திக்கற்றோர் பக்கபலன்
பெரியவர் சிறியவராய்த் தாழ்த்தினார் தன்னைத்தான்

வாழ்வழி தெளிவிலார் வழிகாட்டி விழிதிறந்தார்
ஊழியங் கொள்ளாமல் கொடுக்கவே வந்தார்
வாழ்வதை விடவும் வழங்கவே விழைந்தார்
வீழ்ச்சியை வீழ்த்தி மீட்சயை மீட்டார்

மந்தை மேய்ப்பர் முந்தைத் தரிசகர்
வந்த மேய்ப்பர் சொந்தப் பரிசகர்
இந்த சிந்தையர் இதயங்களை இழுத்தார்
உந்தும் உலகோர் தொடர்ந்தே பணிந்தார்

மீண்ட மானுடம் கொண்டாடும் கிறிஸ்மஸ்
வேண்டி அன்பரை வாழ்த்துங் கிறிஸ்மஸ்
தூண்டும் தொண்டு துணையுடன் கிறிஸ்மஸ்
பேணுங் தாத்தா பரிசுடன் கிறிஸ்மஸ்

வீடு விடாமல் கிறிஸ்மஸ் பாட்டும்
கூடுங் குழந்தைக் கிறிஸ்மஸ் மரமும்
தேடும் பாடம் கிறிஸ்மஸ் குடிலும்
ஈடுங் கிடையா கிறிஸ்மஸ்! வாழ்த்துகிறோம் !!

ஆதாரம் : மத்தேயு 1:18-25, 20:28 லூக்கா 1:28,
1 தீமோத்தேயு 2:5-6, 2 கொரி. 8:9.
கவிதை எண் : 203.
ஆக்கம் : மணிமுத்து.

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Benit Dany
S/o.Mrs.Gnana Blessy Daniel & Mr.Anna Suthan Selva Prakash (late)
11-11-2017

Immanuel Isaac Paul
S/o.Mr.Muthuraj & Mrs.Silvia Muthuraj
13-11-2017

Claira Bensam
D/o.Mr.Bensam Gnanadhas & Mrs.Patricia Bensam
15-11-2017

Ryan Shawn
S/o.Mr.Raguvaran Manohar & Mrs.Stella Raguvaran Manohar
16-11-2017

# Known Celebration.... But unknown truth!

Christmas is a joyful celebration to us which brings us joy, as our Heavenly Father has send His only son for us to give us eternal life through him. But, what does Christmas tree, Christmas Star, Santa Claus, and Candy Cane .....mean to us? Are they drawing us and others to God? Will Jesus who came to this world as a human being, rejoice in our celebrations? First of all, lets understand the real truth behind them and then decide, whether it is necessary in our lives.



**Christmas Star :** First, the star alerted the magi to the birth of Christ, prompting them to make the long trek to Jerusalem. These magi were "from the East," according to verse 1; they are generally thought to be from Persia, which is east of Jerusalem. If so, they may have had some knowledge of the Scriptures since the prophet Daniel had also lived in that region centuries earlier. Perhaps the magi were expecting a new star to announce the birth of Christ from reading Numbers 24:17, which describes a star coming from Jacob and a King ("Scepter") from Israel.

Whatever the exact mechanism, the fact that the star led the magi to Christ is evidence that God uniquely designed the star for a very special purpose. God can use extraordinary means for extraordinary purposes. Certainly the birth of our Lord was deserving of honor in the heavens. It is fitting that God used a celestial object to announce the birth of Christ since "the heavens declare the glory of God" (Psalm 19:1).

**Santa Clause :** When kids inevitably ask, "Who is Santa?" what do we say? As with any question from our children, we can use it as a teaching opportunity. The name Santa Claus is the English form of the Dutch name for St. Nicholas Sinterklaas. Though the modern Santa Claus is associated with a world of fantasy, the historical St. Nicholas was a godly man known for his charity and generosity.



Nicholas was born in the 3rd century to wealthy Christian parents in Patara (a harbor city in modern day Turkey). It is probable that Nicholas and his parents could trace their spiritual heritage to the Apostle Paul, who stopped in Patara on his third missionary journey 200 years earlier. It is said that Nicholas' parents were devout believers who had long prayed for a child. When Nicholas was finally born, they devoted him to God. As an only child, he was raised with great affection and special attention. However, when Nicholas was still a young boy (likely a teenager), a plague struck his city, and both of his parents died. Though a loss like this might turn some away from God, it seems to have drawn Nicholas closer to him. The loss of his parents also seems to have made the boy's heart tender to the suffering of others.

Nicholas was left with a large inheritance and decided that he would use it to honor God. He developed such a good reputation in his region that he was chosen as Archbishop of Myra (a harbor city just south and east of Patara) when he was in his early 20s, an indication that he must have demonstrated wisdom and maturity beyond his years. During his service as Archbishop, a violent persecution of Christians began. Nicholas was almost certainly imprisoned during this time and was likely tortured for his faith. The persecution that began during the reign of the Roman Emperor Diocletian was carried on by his successor, Galerius, for a total of eight long years.

Interestingly, following Emperor Galerius, Constantine, the first Christian emperor, became the undisputed leader of the West. By 324 A.D., Constantine claimed leadership of the entire empire and declared Christianity a legal religion. Once persecution ended and Christians gained new religious freedom, they started to face new challenges. Serious disagreements regarding doctrine began to erupt. Constantine recognized the need for unity among Christians, so in 325 A.D. he summoned bishops from all over the empire to meet in Nicea and discuss critical doctrinal issues. Nicholas of Myra is listed among the bishops in attendance at this meeting. Little could Nicholas have known that his name would one day be more recognized than any other in attendance at this council that developed the famous Nicene Creed.

There are a wealth of stories about Nicholas' life -- many of them emphasize his kindness and generosity. After his death on December 6, a tradition of gift giving was begun in his honor.St. Nicholas Day is still observed on December 6 in many countries, but in others, America included, the practices associated with the day were combined with Christmas. It seemed natural to many Christians that a holiday celebrating giving would merge with the birth of Christ, the greatest gift ever given to the world. However, the merger happened to the dismay of many Christian leaders who thought that St. Nicholas started to draw too much attention away from Christ. In Germany, parents were encouraged to teach their children that the Christ Child was the gift-giver. The name *Kriss Kringle* is the English form of the German name for "Christ Child". Ironically, in America the name *Kriss Kringle* came to be used synonymously with St. Nicholas, St. Nick, Santa Claus and even the English name *Father Christmas.*

In Middle Age art, St. Nicholas was typically depicted as a tall, thin, bearded cleric. So how did he evolve into the Santa that we know today in America? Santa's white beard and red suit are actually quite similar to the bishop's vestments worn by the Dutch Sinterklaas. But the "chubby and plump" appearance of America's Santa Claus is generally traced to the 19th century poem "'Twas The Night Before Christmas" - an attempt to create a more friendly image of Santa and assure children that they had (in the words of the poem) "nothing to dread."

Though the modern Santa Claus has devolved into a secularized figure surrounded by fantasy, his image can serve to help us remember the real St. Nicholas, a man who devoted his life to serving God and inspiring others to do the same. The purpose of all saints (all Christians) is to bring glory to God, not to detract from him.

At Christmas, we celebrate that God himself came in bodily form, in real flesh and blood, to earth. However, after he ascended to heaven and his physical presence was no longer on earth, Jesus entrusted believers to be his "body" (1 Corinthians 12:27). By all accounts, St. Nicholas lived a life that helped others to see the reality of Christ. How can we follow his example and help others to see Christ in us (in real flesh and blood) this Christmas?

Dear ones, let's think twice before we go on to have this kind of Christmas celebration. Let's follow the word of God, by loving our neighbors as ourselves and love the Lord with all our heart, mind, soul and strength. Amen.

Compiled by: Sheeba Reginald

# திருச்சபை ஜெபநாள் 03-12-2017 (முதல் ஞாயிறு)

"என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்... எனக்கு இரங்கி என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்." சங்கீதம் 4:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை, கன்வென்ஷன் கூட்டங்கள், தியான முகாம் யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
